OS:685/2018

Date: 12.11.2024

பெயர் : மனோகரன்

பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

<u>**குறுக்கு விசாரணை:**</u>- 5, 6 பிரதிவாதிகள் தரப்பில்

பனிக்கனூர் கிராம சர்வே எண்.51/2B ல் 2 ஏக்கர் நிலம் யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. அந்த நிலத்தின் வருவாய் ஆவணங்கள் அனைத்தும் யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில்தான் உள்ளது. வருவாய் ஆவணங்கள் நீதிமன்றத்தில் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். எனது நிலத்தில் தொகுப்பு வீடு அரசு அனுமதித்துள்ள அளவை விட கூடுதலான அளவில் கட்டப்பட்டுள்ளதா என்றால் ஆம், கட்டப்பட்டுள்ளது ஒரு சிறிய அறை மற்றும் மாடி படிக்கட்டுகள் கூடுதலாக உள்ளது. கூடுதல் கட்டிடத்தை யார் கட்டியது என்றால் நான் தான் கட்டினேன். தொகுப்பு வீட்டையும் நான் தான் கட்டி கொடுத்தேன். கூடுதலாக கட்டப்பட்டுள்ள மேற்படி தொகுப்பு வீட்டிலுள்ள கட்டிடம் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் எனது அனுபவத்தில்தான் உள்ளது விவசாய பொருட்கள் அதில் வைத்துள்ளோம். எனது பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 ஏக்கர் நிலம் போக மீதமுள்ள சர்வே எண்.51/2A சொத்துக்களில் 3 ஏக்கர் 10 செண்ட் நிலத்தில் 5, 6 பிரதிவாதிகளுக்கு பங்கு கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

<u>**மறுவிசாரணை**</u>:- இல்லை.

ஒப்பம்/-DW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.